பிரிவுகள் வழங்கப்பட்டு, தற்போது கல்லூரி நடைபெற்று வருகிறது. அந்தக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களால் 7¼ கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிலம் தேர்வு செய்யப்பட்டு, கட்டடம் கட்டும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கல்லூரிக்கு கூடுதல் பாடப் பிரிவுகள் வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். இதுவரை, தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த மூன்று ஆண்டு கால ஆட்சியில், ஏழை, எளிய கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மாணவர்கள் கல்வி பயில வேண்டும் என்ற நோக்கத்திற்காக 960 கூடுதல் பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஐந்து ஆண்டு கால ஆட்சியில் 270 பாடப் பிரிவுகளே வழங்கப்பட்டன. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், மூன்றே ஆண்டுகளில் கூடுதலாக 960 புதிய பாடப் பிரிவுகள் வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேற்கண்ட கல்லூரியில் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது என்றும், அங்கு கூடுதல் பாடப் பிரிவுகளைத் தொடங்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு அதற்கான வாய்ப்பு இல்லை. அடுத்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கையினை ஏற்று, கூடுதலாக பாடப் பிரிவுகள் தொடங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 393, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

393—

பராமரிப்பு மையங்கள்

***29548—திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2014 ஆகஸ்ட் 11

(அ) சங்கரி தொகுதி, சங்கரியில் மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்பு மையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டதன் அடிப்படையில், சேலம் மாவட்டத்திற்கு 14 வயதிற்கு மேற்பட்ட மாற்றுத் திறன் மற்றும் மன வளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தொழிற்பயிற்சியுடன்கூடிய இல்லம் ஒன்றும், பெண்களுக்கான தொழிற்பயிற்சியுடன்கூடிய இல்லம் ஒன்றும், மன நலக் காப்பகம் ஒன்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்பட்டுவருவதால், தனியாக சங்கரியில் மாற்றுத் திறனாளிகளுக்கான பராமரிப்பு மையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான இல்லத்தில் இருக்கக்கூடிய பள்ளிகள் இரண்டும், மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் தினமும் வந்து செல்லக்கூடிய பள்ளிகள் நான்கும், அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்மூலம் சேலம் மாநகரில் இயங்கி வருகின்றன. தற்போது சேலம் மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளின் எண்ணிக்கை 44,000 என பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து பரிசீலனை செய்து, சங்கரி, மேட்டூர் மற்றும் ஆத்தூர் ஆகிய பகுதிகளில் மன வளர்ச்சி குன்றிய பிள்ளைகளுக்கு, இல்லத்துடன்கூடிய பள்ளிகளை அரசு சார்பாகவோ அல்லது அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்மூலமாகவோ அமைக்க ஆவன செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

2014 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாற்றுத் திறனாளிகளின் மொத்த எண்ணிக்கையைக் குறிப்பிடுகின்றார் என நான் கருதுகிறேன். சேலம் மற்றும் நாமக்கல்லில் மன வளர்ச்சி குன்றியவர்களுக்காக 2 மையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கு, தனியார் தொண்டு நிறுவனங்களும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்ற மானிய உதவித் தொகையுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, பராமரிப்பு உதவித் தொகை ரூ.500/– என்று இருந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால், 2011–2012 ஆம் ஆண்டில், இந்தியாவிலேயே முதன்முறையாக இத்தொகை 1,000/– ரூபாயாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பிறகு, அவர்களைப் பராமரிப்பது மிகவும் சிரமமான வேலை என்பதை உணர்ந்து, இந்த நிதியாண்டிலே ரூ.1,000/– ஆக உதவித் தொகை இருந்ததை ரூ.1,500/- ஆக உயர்த்தி வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். இந்தத் தொகையும் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகள் பராமரிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே மனித நேயத்தோடு மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கி வருகின்றார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மன நலம் குன்றியவர்களை தனியார் தொண்டு நிறுவனங்களில் சேர்க்கக்கூடிய அளவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்து தந்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தப் பகுதியிலே அதுபோன்று அதிகமான மன நலம் பாதிக்கப்பட்டவர்கள் இருப்பார்கள் என்பதைக் கண்டறிந்து, குறிப்பு தருவார்களேயானால், தனியார் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளை அவர்களோடு இணைத்து, தனியார் தொண்டு நிறுவனங்கள்மூலம் அங்கு ஒரு மையம் ஏற்படுத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி அவர்கள்.*

திருமதி ப. விஜயலட்சுமி பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளுக்கு வழங்கக்கூடிய ரூ.1,000/– உதவித்தொகையை ரூ.1,500/– ஆக உயர்த்திக் கொடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகளுக்கு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால், பெட்ரோல் ஸ்கூட்டர் வாகனங்கள் அரசு சார்பாக தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. அந்த பெட்ரோல் ஸ்கூட்டர் வாகனங்களின் எண்ணிக்கையை அதிகரித்து வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே முதன்முதலாக பெட்ரோல் ஊற்றி ஓட்டக்கூடிய ஸ்கூட்டர்களை மாற்றுத் திறனாளிகளுக்கு அறிமுகம் செய்தவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த பெட்ரோல் ஸ்கூட்டரால் இன்றைக்கு கல்வி பயில்கிற மற்றும் வேலைக்குச் செல்கிற மாற்றுத் திறனாளிகள் பயனடைந்து வருகிறார்கள். இந்த பெட்ரோல் ஸ்கூட்டர்களை அறிமுகம் செய்த காலத்தில், அதனுடைய மொத்த எண்ணிக்கை 400 ஆகத்தான் இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள், மாற்றுத் திறனாளிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, அதன் தேவையை அறிந்து, மேலும் 1,000 பெட்ரோல் ஸ்கூட்டர் வாகனங்களை வழங்க வேண்டும் என்று கூறியவுடன், அதனை அதிகப்படுத்தித் தந்திருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் தேவையிருப்பின், மாண்புமிகு*

2014 ஆகஸ்ட் 11]

முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4-8-2014 முதல் விழுப்புரம் மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தின் எதிரிலே கோரிக்கைகள் சிலவற்றை முன்வைத்து, இன்று வரை எட்டு நாட்களாக, மாற்றுத் திறனாளிகள் தொடர் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கின்றார்கள். இதுவரை அரசு அதிகாரிகளோ, அரசுக்குச் சம்பந்தப்பட்டவர்களோ யாரும் அவர்களைச் சென்று பார்த்து, அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தவில்லை. அவர்களைப் பார்ப்பதற்கு மிகவும் பரிதாபமாக இருக்கிறது. அவர்களுடைய கோரிக்கை என்னவென்று சொன்னால், 4-3-2010. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோரிக்கைகளையெல்லாம் கேள்வி நேரத்தில் சொல்ல முடியாது. மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் என்ன வேண்டுமென்று மட்டும் கேளுங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு) இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கோரிக்கைகளையெல்லாம் கேள்வி நேரத்தில் கேட்டுக்கொண்டிருக்க முடியாது. (குறுக்கீடு) திரு. எல். வெங்கடேசன், கோரிக்கைகளையெல்லாம் கேட்கக்கூடாது. மூலக் கேள்விக்கு சம்பந்தமாக மட்டும் கேளுங்கள், அவ்வளவுதான். கேள்வி நேரத்தில் அதையெல்லாம் கேட்கக்கூடாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எல். வெங்கடேசன் அவர்கள்.

திரு. எல். வெங்கடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, G.O.-ல் என்ன சொல்லியிருக்கிறது என்பதை மட்டும் நான் சொல்லி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் என்ன வேண்டுமென்று கேளுங்கள். (குறுக்கீடு) கேள்வி நேரத்தில் G.O.-வைப் பற்றி எல்லாம் கேட்கக் கூடாது.

(குறுக்கீடு) மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள், பதில் இருந்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்று காலையில் பத்திரிகையில் பேட்டியைக் கொடுத்துவிட்டுத்தான் இங்கு வந்து கேள்வியைக் கேட்கிறார். காலையில் பத்திரிகைக்கு பேட்டி கொடுத்திருக்கிறார். விழுப்புரத்திற்குச் சென்று மாற்றுத் திறனாளிகளைப் பார்த்துவிட்டு, 'இன்று நான் சட்டமன்றப் பேரவையில் குரல் எழுப்புவேன்' என்று கம்பீரமாக, அவர்களுக்கு ஆதரவைத் தருவதுபோல், அவர்களிடம் சொல்லிவிட்டுத்தான், இங்கே வந்து கேள்வியைக் கேட்கிறார். இது அவருடைய சொந்தக் கேள்வி அல்ல. இங்கு அவர் துணைக் கேள்வியைத்தான் இப்போது கேட்டிருக்கிறார். மாற்றுத் திறனாளிகளுக்காகக் குரல் கொடுப்பவராக இருந்தால், அவர்களுக்காக தனியாகக் கேள்வியை எழுப்பியிருக்க வேண்டும். இருந்தாலும் பரவாயில்லை, மாண்புமிகு உறுப்பினருக்கு மரியாதை தர வேண்டும் என்கிற எண்ணத்தில் பதில் சொல்கிறேன். மாற்றுத் திறனாளிகள் கொடுத்திருக்கிற கோரிக்கை 3% இட ஒதுக்கீடு குறித்ததாகும். அதுதான் அவர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கக்கூடிய கோரிக்கையாகும். நான் ஏற்கெனவே, இதே சட்டமன்றப் பேரவையில், சமூக நலன் மற்றும் மாற்றுத் திறனாளிகள் துறை மானியக் கோரிக்கைமீதான விவாதத்திலேயே விரிவாக விளக்கம் தந்திருக்கிறேன்.*

மாற்றுத் திறனாளிகளுக்காக மனித நேயத்தோடு பல்வேறு சாதனைகளைச் செய்திருப்பவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா ஒருவர்தான் என்பதை நான் இதே அவையில் குறிப்பிட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 3% இட ஒதுக்கீட்டுக் கொள்கையை இந்தியாவிலேயே நம்முடைய தமிழ்நாட்டிலேதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ணுங்கருத்துமாகக் கவனித்து, நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த அவையில் தெள்ளத்தெளிவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்து, அதனைப் பதிய வைக்க விரும்புகிறேன். 3 சதவிகித இட ஒதுக்கீடு மாற்றுத் திறனாளிகளுக்காக அனைத்துத் துறைகளிலும் நிரப்பப்பட வேண்டும் என்று அனைத்துத் துறைச் செயலாளர்களையும் உள்ளடக்கி, தலைமைச் செயலாளரின்

2014 ஆகஸ்ட் 11]

தலைமையிலே குழுவைக் கூட்டி, ஆசிரியர் தேர்வு வாரியம், தேர்வாணையம் இந்த இரண்டு இடங்களிலேயும் மாற்றுத் திறனாளிகளுக்கென ஒதுக்கப்பட்ட பணியிடங்களை ஊர்ஜிதப்படுத்துவதற்காக அவர்களுக்கு வேண்டிய அனைத்துச் சலுகைகளும் தரப்பட வேண்டும், காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அதிலே தகுதியுடையவர்களுக்கு நிச்சயமாகக் கிடைக்கும், தகுதியில்லாதிருக்கிறபோது காலதாமதமாகும். அவர்கள் தேர்வு எழுத வேண்டும். கடந்த ஆண்டிலேகூட பார்வையற்றவர்கள் போராட்டம் நடத்தினார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மனிதநேயத்தோடு துறையினுடைய செயலாளர்கள் அனைவரையும் அழைத்து கூட்டம் நடத்தி, அந்தக் கூட்டத்திலே அவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்திருக்கிறார்கள். தேர்விலே மதிப்பெண் பெற்றவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பிலே முன்னுரிமை தர வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆக, வேலைவாய்ப்பிலே 3 சதவிகித இட ஒதுக்கீட்டை கட்டாயமாக மாற்றுத் திறனாளிகளைக் கொண்டு நிரப்புவதில் தீவிரமாக இருக்கக்கூடியவர் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் அழுத்தந்திருத்தமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய கோரிக்கையை வைத்துக் கொண்டு தயவுசெய்து தே.மு.தி.க. உறுப்பினர்கள் அரசியல் செய்ய வேண்டாம் என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 395, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

395—

கூட்டுறவுக் கடன் சங்கம்

***38397—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—